**GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE PAPPIREDDIPATTI**
*Affiliated to Periyar University, Salem-11.*
*(Recognized Under Section 2(f) & 12(B) of UGC Act, 1956)*
**Dharmapuri - 636905, Tamilnadu, India.**
**Website: www.gascprp.in phone: 04346-246212**

# எனக்கு பிடித்த புத்தகம் - பேச்சுப் போட்டி

**இடம் :** நூலகம் **தேதி :** 12-08-2023

பாப்பிரெட்டிப்பட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 12.08.2023 அன்று தேசிய நூலகர் தினத்தினை முன்னிட்டு மாணாக்கர்களுக்கு "எனக்கு பிடித்த புத்தகம்" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி நடைபெற்றது. முப்பதிற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் உரையாற்றினர். கல்லூரி முதல்வர், முனைவர் வே.அன்பரசி அவர்கள் பேசும் பொழுது, "மாணவர்களின் புத்தக வாசிப்பு பழக்கமானது” அவர்களின் வாழ்க்கையை முன்னேற்ற பாதையில் வழி நடத்தும். ஆதலால், மாணவர்கள் நூலகத்தினை நல்ல முறையில் பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார். பேச்சுப் போட்டியின் நடுவர்களாக இயற்பியல் துறைத் தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர், முனைவர் வீ.இரவி மற்றும் கணினி அறிவியல் உதவிப் பேராசிரியர் திரு.த.அருண்நேரு ஆகியோர் செயல்பட்டனர். இளங்கலை மூன்றாமாண்டு இயற்பியல் பயிலும் வெ.பாவனா என்ற மாணவி முதல் பரிசினையும், முதுகலை ஆங்கிலம் இரண்டாமாண்டு பயிலும் அ.பிரின்சி என்ற மாணவி இரண்டாம் பரிசினையும், இளங்கலை கணினி அறிவியல் இரண்டாமாண்டு பயிலும் இரா.கௌசல்யா என்ற மாணவி மூன்றாம் பரிசினையும் வென்றனர். வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு புத்தகம் மற்றும் சான்றிதழ் பரிசாக வழங்கப்பட்டது. நிகழ்விற்கான ஏற்பாடுகளை நூலகர் முனைவர் கி.ச.கல்யாணி செய்து இருந்தார்.





பாப்பிரெட்டிப்பட்டி அரசு கல்லூரியில்

# நூலகர் தினத்தையொட்டி பேச்சுப் போட்டி

● அரூர்

பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தேசிய நூலகர் தினத்தையொட்டி 'எனக்கு பிடித்த புத்தகம்' என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் அன்பரசி தலைமை வகித்தார். போட்டியில் 30-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்று பேசினர்.

பேராசிரியர்கள் ரவி, அருண் பிரபு ஆகியோர் நடுவர்களாக இருந்தனர். போட்டி முடிவில் இளங்கலை மூன்றாமாண்டு இயற்பியல் பயிலும் வெ.பாவனா முதல் பரிசு வென்றார். முதுகலை ஆங்கிலம் இரண்டாமாண்டு மாணவி அ.பிரின்சி, இளங்கலை கணினி அறிவியல் இரண்டாமாண்டு மாணவி கவுசல்யா ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்தனர். வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு புத்தகம் மற்றும் சான்றிதழ் பரிசாக வழங்கப்பட்டது. நிகழ்விற்கான ஏற்பாடுகளை நூலகர் முனைவர் கல்யாணி செய்திருந்தார்.




↑ பாப்பிரெட்டிப்பட்டி அரசுக் கல்லூரியில் நூலகர் தின விழாவையொட்டி நடந்த பேச்சுப்போட்டியில் பேசிய மாணவி.